# தாமிரபரணி மஹா புஷ்கர் கமிட்டி

## திருநெல்வேலி

ஒன்றிணைவோம் ! நதியை காப்போம் !! முன்னோர் வழி நடப்போம் !!!



## 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் சிறப்பு மிக்க தாமிரபரணி மஹா புஷ்கர் விழா

புரட்டாசி 27 முதல் ஐப்பசி 6 வரை

(அக்டோபர் 12 முதல் அக்டோபர் 23 வரை)

- நதியை சுத்தப்படுத்துவோம்
- நாட்டு பசுவை காப்போம்
- மரம் வளர்ப்போம்
- இயற்கை விவசாயம் செய்வோம்
- கிராம வளம் காப்போம்

## தாமிரபரணி மஹா புஷ்கர் நோக்கம் - பயன்

- ★ அகஸ்திய மாமுனியால் தமிழகத்துக்கு தாமிரபரணியும், காவேரியும் கிடைக்கப் பெற்றோம். அப்படிப்பட்ட புண்ணிய நதிகளை நாம் தூய்மையாகவும், புனிதமாகவும் ஆக்கி நமது அடுத்த தலைமுறைக்கு வழங்குவோம்.
- ★ 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை 12 ராசிகளில் 12 நாட்கள் குரு பகவான் அமர்ந்து அனுக்கிரகம் தருகின்றார். இந்த வருடம் விருச்சிக ராசியான தாமிரபரணியில் பிரவேசிக்கிறார். ஆகவே நாம் தாமிரபரணி நதியில் நீராடி புண்ணியம் பெறுவோம். ஒரு முறை நீராடுவதால் இலட்சம் முறை காயத்ரி மந்திரம் ஜெபித்த புண்ணியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை

## நதியின் பழமை - பெருமைக்கு சான்றான வரலாற்று குறிப்புகள்

- ★ தாமிரபரணி ஆற்றுப்படுகையில் அகஸ்தியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட 9 சிவலிங்க ஸ்தலங்கள் உள்ளன. அவை நவகைலாயம் என இன்று அழைக்கப்படுகின்றன.
- ★ அதே போன்று 9 பெருமாள் ஸ்தலங்கள் உள்ளன. அவை நவ திருப்பதி என அழைக்கப்படுகின்றன.
- ★ தாமிரபரணி உற்பத்தியாகும் பொதிகை மலையில் இருந்துதான் அகஸ்தியர் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தார்.
- ★ மகாபாரதத்தில் குந்தியின் மகனே ! மோட்சத்தை அடைய கடும் தவம் புரிந்த முனிவர்களின் ஆசிரமத்தில் இருந்த தாமிரபரணி பெருமையை உனக்கு நினைவு படுத்துகிறேன் என, தர்மரை பார்த்து முனிவர் சொல்வதாக பாடல் உள்ளது.
- ★ காளிதாசரின் ரகுவம்சம் நூலில் தாமிரபரணி கடலில் கலக்கும் இடத்தில் விளைந்த உயர்தர முத்துக்களைக் கொண்டு வந்து ரகுவின் காலடியில் பணிந்ததாக பாடல் உள்ளது.
- ★ தாமிரபரணி இலங்கை வரை பாய்ந்து கொண்டிருந்தது என கிரேக்க பயணக் குறிப்பு உள்ளது. இலங்கையை "தாம்ரபர்ணே" என அழைக்கும் குறிப்பும் உள்ளது.

## நதியின் பயன்கள்

***இன்று 130 கி.மீட்டர் நீளமுடைய தாமிரபரணி நதியில்***

- ★ 6-உபநதிகள் வெவ்வேறு பகுதியில் உற்பத்தியாகி தாமிரபரணியுடன் இணைகின்றன.
- ★ 8-அணைக்கட்டுகள், 11 கால்வாய்கள் உள்ளன. (7 அணைக்கட்டுகள் பண்டைய தமிழ் மன்னர்களாலும், ஸ்ரீவைகுண்டம் அனை ஆங்கிலேயர்களாலும் கட்டப்பட்டது.)
- ★ கிட்டத்தட்ட 4400 சதுர கிலோ மீட்டர் (தோராயமாக 1 லட்சம் ஏக்கர்) விவசாய நிலம் இதனால் பயன் அடைகிறது.
- ★ 28 மெகாவாட் நீர் மின் சக்தி கொண்ட உற்பத்தி நிலையமும் அமைந்துள்ளது.

## வேறு எந்த நதியிலும் கிடைக்காத பொக்கிஷம்

- ★ ஆற்றின் உற்பத்தி மற்றும் பாய்ந்தோடும் பகுதிகளில் பல அபூர்வமான மூலிகைச்செடிகள், மரங்கள் உள்ளன.
- ★ அரிதான வேறு எங்கும் கிடைக்காத பல மீன் வகைகள் உயிர் வாழ்கின்றன.
- ★ ஆற்றுப் படுக்கை சதுப்பு நிலப்பரப்பு பகுதியில் கிட்டத்தட்ட 100 வகையான பறவை இனங்கள் ஜீவிக்கின்றன. இதனால் உலகில் பல்லுயிர் வாழ்சூழலியல் பகுதிகளில் இதை முதன்மை இடமாக உலக ஆய்வாளர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

| உபநதிகள் | உற்பத்தி | சேருமிடம் | தாமிரபரணி அதுவரை கடந்திருந்த தொலைவு |
|---|---|---|---|
| காரையாறு | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் | காரையாறு அணை | 6 கி.மீ. |
| சேர்வலாறு | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் | பாவநாசம் அணை | 22 கி.மீ. |
| மணிமுத்தாறு | மாஞ்சோலை மலை | ஆலடியூர் | 36 கி.மீ. |
| கடனா நதி | அகத்திய மலை உயிர்கோளம் | திருப்புடை மருதூர் | 43 கி.மீ. |
| பச்சையாறு | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் | தருவை | 61 கி.மீ. |
| சிற்றாறு | குற்றாலம் அருவிகள் | சீவலப்பேரி | 73 கி.மீ. |

| அணைக்கட்டுகள் | கால்வாயின் பெயர்கள் |
|---|---|
| கோடை மேழலகியான் அணைக்கட்டு | தெற்கு கோடை மேழலகியான் கால்வாய்<br>வடக்கு கோடை மேழலகியான் கால்வாய் |
| நதியுன்னி அணைக்கட்டு | நதியுன்னி கால்வாய் |
| கனடியன் அணைக்கட்டு | கனடியன் கால்வாய் |
| அரியநாயகிபுரம் அணைக்கட்டு | கோடகன் கால்வாய் |
| பழவூர் அணைக்கட்டு | பாளையம் கால்வாய் |
| சுத்தமல்லி | திருநெல்வேலி கால்வாய் |
| மருதூர் | மருதூர் மேலக்கால்<br>மருதூர் கீழக்கால் |
| ஸ்ரீவைகுண்டம்<br>(1869) ஆங்கிலேயர் கட்டியது | தெற்கு முதன்மை அணைக்கட்டு<br>வடக்கு முதன்மை அணைக்கட்டு |

விழா கொண்டாட்டத்தில் இணைவீர் !



தொடர்புக்கு :

**8903216303, 9442497877;**
**9487174771, 9487550936;**
**9944918891, 6382300408**

தாமிரபரணி நதி காப்போம் பணியில்

# RAJESH ELECTRICALS

48, Raja Building, Tirunelveli - 627 001. Tamil Nadu
Email - Rajesh_firm@yahoo.co.in